
தாகூர் முத்துக்குவியல்



காசுவர் முத்துக் குவியல்

தொகுத்தவர்:
கலைச்செல்வன்

கலைமன்றம்
சென்னை-1

முதற் பதிப்பு: '52 டிசம்பர்

விலை 0—8—0

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை.

மகிழுங்கள்

உலகம் என்னும் பெருஞ் சோலைக் குட் புகுந்து, அறிஞர்கள் என்னும் கனி மரங்களைக் கண்டு, அதிலே கனிந்து தலுங்கும் கனிகள் என்னும் அறிவு மொழிகளை, முயற்சி என்னும் கோல் கொண்டு பறித்து, நூல் என்னும் தங்கத் தாம்பாளத்தில் வைத்து, தமிழகத்தின் முன் படைக்க விரும்பினோம். அந்த விருப்பத்தின் விளைவுகளில் ஒன்று நாகூர் முத்துக் குவியல். சுவைத்து மகிழுங்கள்.

வணக்கம்
கலை மன்றத்தினர்

விற்பனை நிலையம்:—
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனா பஜார்
சென்னை - 1

கவியரசர் தாகூர்

[வரலாறு]

இந்தியாவின் புகழும் பெருமையும் உலகெல்லாம் பரவ காரணமான ஒரு சிலரில், கவியரசர் ரவீந்திரநாத் தாகூரும் ஒருவர். வங்காளத்தின் தலைநகரான கல்கத்தாவில் 1861-ஆம் ஆண்டு மே மாதம் 6-ஆம் நாள் பிறந்தார். மகரிஷி தேவேந்திரநாத தாகூரின் கடைசி மகன் இவர்தான்.

ஐந்தாவது வயதில் தாகூரை பள்ளியில் சேர்த்தனர். ஆனால் பள்ளி வாழ்க்கை பிடிக்கவில்லை தாகூருக்கு. ஒழுங்காகப் பாட சாலைக்குச் செல்லாமல் 'மட்டம்' போடத் தொடங்கினர். இதை யறிந்த அவரின் தந்தை மகனுக்கு வீட்டிலேயே கல்வி போதிக்க ஆரம்பித்தார். இம்முயற்சி நல்ல பலன் அளித்தது.

தாகூர் இயற்கையிலேயே, கவி புனையும் வன்மை பெற்றிருந்தார். பதினேராம் வயதிலேயே பாட்டு கட்டினர். இவருடைய ஆரம்பக் கவிதைகள், அவர் சகோதரர் நடத்திய 'பாரதி' யில் வெளிவந்தன.

மக்கள் அந்தக் கவிதைகளைப் புகழ் மாலை அளித்து வரவேற்றனர்.

1877-ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்று ஒரு சர்வகலாசாலையில் சேர்ந்து படிக்கலானார். கவிதா உள்ளம் கொண்ட தாகூர் பள்ளிப் படிப்பில் நடந்த தேர்வில் தோற்று இந்தியா வந்துசேர்ந்தார். இருபத்திரண்டாம் வயதில் திருமணம் செய்து கொண்டார். அப்போது தாகூரின் புகழ் எங்கும் பரவியிருந்தது.

1909-ஆம் ஆண்டில்தான் உலகம் புகழும் 'கீதாஞ்சலி' என்ற நூலை எழுதினார். 1913-ஆம் ஆண்டு இப் புத்தகத்திற்காக - கலைக்கான

நோபல் பரிசை தாகூர் பெற்றார். தமக்குப் பரிசாகக் கிடைத்த 8000 பவுன்களை 'விஸ்வபாரதி' பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்காக அளித்து விட்டார். இதன் பிறகு பல அரிய பட்டங்கள் தாகூரைச் சரண் அடைந்தன.

தாகூர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் சிறந்த பங்கெடுத்துக் கொண்டார். 1914-ல் அரசாங்கத்தார் அளித்த, 'சர்' பட்டத்தை, அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டிக்கும் முறையில் வீசியெறிந்தார்.

தன் வாழ்நாளின் பிற்பகுதியை 'சாந்தி நிகேதன்,' 'விஸ்வபாரதி'

ஆகிய இவ்விரண்டின் வளர்ச்சிக் காகச் செலவிட்டார்.

உலகம் போற்றும் கவியரசர் தாகூர் 1941- ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7-ஆம் நாள், வியாழக் கிழமை யன்று உயிர் நீத்தார். அவ ருடைய மறைவிற்காக உலகமே வருந்தியழுதது.

தாகூர் சிறந்த கவிஞர் மட்டும் அன்று. அவர் உயர்ந்த நாவலாசிரி யர். கருத்து நிறைந்த சிறுகதை களை உருவாக்கியவர். நல்ல நாடகங் களை இந்நாட்டிற்கு நல்கியவர். தாகூரிடம் காந்தி, பங்கிம்சந்திரர் போன்றவர் நட்புகொண் டிருந் தனர். உலகம் சுற்றிய உயரிய

கவிஞர் தாகூர். இந்தியாவின் புகழ்க் கொடியை உலக அரங்கில் ஏற்றிய மாவீரர் என்றால், அது பிழையாகாது.

வாழ்க கவியுள்ளம்

தேச பக்தி

பாரத நாடு மிகப் பெரிய தேசம். பண்டைக்காலத்தில் அதனுடைய ஒற்றுமையை பூரணமாக அறிந்து கொள்ளத் தகுந்த சாதனங்கள் இல்லை. தற்காலத்தில் தேசப் படங்கள் மூலமும் பூகோள நூல்கள் மூலமும் நமது தேசத்தின் அமைப்பை மனதில் தெளிவாக நாம் அறிவது போல் அக்காலத்தில் அறிவது சாத்தியமில்லை. ஆகவே, யாத்திரை செய்யும் பொழுது நாட்டின் ஒற்றுமை ஒருவாறு விளங்கி தேசபக்தி பெருகி வந்தது.

அஹிம்சா மார்க்கம்

அஹிம்சா மார்க்கம் என்ருல் கொடுமைகளையும் அநீதிகளையும் மௌனமாகப் பொறுத்துக்கொள்ளும் பயங்காளித்தனம் அல்ல.

கேவல நிலைமை

இந்தியாவில் உள்ள பெரிய மதம் 'இந்து மதம்;' அஃது அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் போன்ற நிலையில்உள்ளது. ஆரியர் கொள்கைகளும் திராவிடர் கொள்கைகளும் கலந்து விளங்குவது; ஒரு கடவுள் வணக்கம் முதல் ஆயிரக்கணக்கான சிறிய தெய்வங்களின் வணக்கம் ஈருகக்கொண் டிருப்பது. மனப் பிரார்த்தனை முதல் உயிர்க் கொலை

வரையுள்ள வழிப்பாட்டு முறை களைக் கொண்டுள்ளது. இம்மதத் தில் முதலில் சாதிகள் இல்லை. ஆயின் பின்னர்ச் சாதிகள் அசைக்க முடியாதவாறு நிலைபெற்று விட் டன. இச்சாதி முறையால் இந்து மதம் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் உண்மைத் தத்துவத்தை இழந்து தவிக்கிறது. இந்துக்களில் 8 கோடி மக்களைத் தீண்டத் தகாதவர் என்று எல்லை கட்டிவிட்டது. இக்கேவல நிலைமை பல ஆண்டுகளாய் இருந்து வரு கிறது. இஃதொன்றே இந்து மதத் தின் சீர் கேட்டிற்குப் போதிய காரணம் ஆகும்.

காதல் கட்டை மீறிப் புரண்டோடும் இயல்பு உடையது. ஒரு கணத்தில் வேகும் பாத்திரத்தையே உடைத்தெறிந்து விட்டுக் கொந்தளித்து வழிந்தோடும் திராக்ஷ ரசம் போன்றது.

உதவாக்கரையை...

உலகில் ஒரு சாரார் தொண்டு செய்வதற்கென்றே ஜன்மம் எடுக்கிறார்கள். தாம் எடுத்த ஜன்மம் பயனடைவதன் பொருட்டே கையாலாகாத ஒருவனுடைய மாயத்துள் கட்டுண்டு அலைகிறார்கள். இவர்களுடைய பலஹீனத்தைக் கண்டு அவனும் தன் முழு

பொறுப்பையும் இத்தகையோர் மேல் போட்டு விடுகிறான், 'எம் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற குறிக்கோளுடையவர்கள் தம் சொந்த வேலையில் ஒருவித ஆறுதலும் அடையாது போனாலும் ஒருவனுக்கு மட்டும் அமோகமான நிம்மதியைத் தருகிறார்கள். அவனை சங்கடங்களிலிருந்து மீட்கிறார்கள். உலகத்தவர் கண்முன் அந்த உதவாக்கரையை உயர்த்தி வைக்கிறார்கள்.

ஏராளம்

படிக்கத் தகுந்த புத்தகங்களை விடப் படிக்கத் தகாத நூல்களே உலகத்தில் ஏராளம்.

கொடிய ஏமாற்றம்

மரணத்தில் அன்புக் காதல் ஏமாற்ற மடைந்தால், இந்தக் கொடிய ஏமாற்றம், ஒரு தீய புழு வைப்போல, சகல பொருள்களி லும் உட்புகுந்து நாசம் செய்து விடுமல்லவா?

தற்கால கிறிஸ்தவர்

'எளியவர்களுக்கே இவ்வுலகம் உரியது' என்று ஏசுகிறிஸ்து உப தேசித்த போதிலும் தற்காலத்துக் கிறிஸ்தவர்கள் 'மிருக பலத்தா லேயே உலகத்தை ஜயிக்க வேண் டும்' என்று சொல்லுகிருர்கள்.

அநாகரிகம்

ஆற்ருமை என்னும் பகையைப் பாராட்டி வளர்ப்பதுதான் அநாகரிகத்தின் முதல் அறிகுறி.

வாழ்க்கை ஒரு மலர்

இளமையில் என் வாழ்க்கை ஒரு மலர் போல இருந்தது - தனது நிறைவி லிருந்தது. ஒன்று அல்லது இரண்டு இதழ்களை இழந்த பின் அதற்காக வருந்தாத மலர் அது; ஏனெனில், வசந்தக் காற்று, இம் மலரினிடம் பிச்சை கேட்கிறது.

கரும்பும் வேம்பும்

மணப்பந்தலில் வேம்பாக இருப்பவள் மணல் வெளியில் கரும்பாகி விடுகிருள்.

பெண் புத்தி

ஆடவர் புத்தி சாணை பிடிக்கா விட்டாலும் கணத்தில் காரியத்தை நடத்தும் வாளை ஒத்தது. பெண் மக்கள் புத்தியோ, கூர்மையாக இருந்தும் பெரிய காரியத்துக்கு உதவாத பேனுக்கத்திக்குத்தான் ஈடாகும்.

ஒளிக் கதிர்

ஜீவ உலகில் எல்லாவற்றையும் விடப் பெரிதாக ஒளிப்பது மனித இயற்கை புத்துயிர் எடுக்கும் பொழுது தோன்றும் அழகையே. இருளின் கருவைக் கிழித்துக் கொண்டு புறப்படும் ஒளிக்கதிர் போன்றது இந்த அழகை.

மனம்

மனம் கூர்மையானது; அகன்றதல்ல. ஆனால் ஒவ்வொரு முனையிலும் குத்திக்கொள்ளுகிறது. நகர்வதில்லை.

வாழ்வு

வாழ்வே ஒரு ரஸ கதம்பம். பல சரக்குகள் குழைத்த ஒரு கலவை. வாஸ்தவமும், கற்பனையும், இல்லாததும் பொல்லாததும் சேர்ந்ததோர் விசித்திரக் கூட்டு.

அரும்பும் பூவும்

அரும்பின் ஆசை, இரவையும் பனியையும் தேடுவது; ஆனால் மலர்ந்த பூ, சுதந்திர ஒளியையே கேட்கிறது.

ஆற்ருமை

தொழிலும் கலேயும் சேர்ந்தோர் அரிய பண்பில் ஆற்ருமை என்னும் பகைவன் புகுந்து விட்டால், மனிதத் தன்மை அடியோடு அழிந்து விடுகிறது. ஆற்ருமை, மனிதனுடைய இழிவான இயற்கையிலிருந்து முளேப்பது. அதற்கு வெட்கம் என்பது இல்லே. தனக்குள்ள இந்த இழந்த தன்மையைப் பெருமை அடித்துக் கொள்ளுகிருன் மனிதன்.

ஒரே காரணம்

நாகரிகச் சமுதாயத்தின் சுவையறியும் ஆற்றலுக்கும் அதன் அறிவுத் திறமைக்கும் இடையே அதிக

வேறுபாடு தென்படுகிறது. இதற்கு ஒரே காரணம்; ஆற்றுமையே. வேறு விதமான செயல்களைப் பின்னல் தள்ளிவிட்டு அது தன் வயிற்றைமட்டும் நிரப்பிக் கொள்ளுகிறது. அதிகப்படியான பண்டங்களை உற்பத்தி செய்யும் வெறியில் அழகிற்கு இடம்தர மறுக்கிறது. படைப்பு இன்பத்திற்கும், பொருள் நசைக்கும் இடையேவளரும்இந்தப் பகைமை மானிட தருமத்தையே கலக்கிப் பெரும் புரட்சியை உண்டாக்கும். இந்தப் போரில் அடிமைகள் வெற்றி பெறினும் சரி, யமன் தன் தூதுவரை அனுப்பி இதற்கு ஒரு முடிவைக் கொண்டு வராமற் போக மாட்டான்.

அமையும்

மனிதன் தான் செய்யும் தொழிலின் மேன்மையை உணரும் பொழுது அந்தத் தொழிலுக்கு ஓர் அழகைத் தர முயல்கின்றான். வசிப்பதற்கு வீட்டைக் கட்டுவதோடு அதை அழகாகவும் அமைத்துக் கொள்கிறான். இவ்வாறேதான் உண்ணும் கலங்களிலும், உடுத்தும் ஆடைகளிலும் பல வேறுபாடு பொருள்களை விட அவன் புனையும் அலங்காரங்கள் ஒரு படி அதிகமாகவே இருக்கும். அவரவர்கள் இயற்கையின்படி இது அமையும்.

உலகத்தவரின் விருப்பம்

புதுமையானதும் ஆடம்பரமான தையுந்தானே உலகத்தவர் விரும்பு கிருர்கள் !

பொது மக்கள்

பொதுமக்கள் என்போர் இன்று கண் சிவந்து எதைத் தாக்கி எறிகி ருர்களோ வருங்காலத்தில் சத்தம் போட்டு அதையே உயர்வாகக் கரு துவர். இன்று கண்ணீர் துளிக்கத் துயர் மேலிட்டுக் கேட்கும் ஒரு விஷயம் மற்ருெரு காலம் சிரிப்புக் கும் ஏளனத்திற்கும் பாத்திரமாகி விடும். ஒரு சமயம் தம் மனம் இளகி இருந்ததைக்கூட இந்தப் பொது மக்கள் அடியோடு மறந்துவிடுவர்.

வம்பளப்பு

வம்பளப்புக்கு மிகவும் அவகா சம் வேண்டும். அதைக் கேட்டு அநுபவிக்கத் தகுந்த ஆள் வேண் டும். நம் சொற்பொழிவுகளைக் கேட்க பலபேர் தேவை. ஆனால் நமது வீண் அளப்பைச் சுவைக்க இரண்டொரு பேர் இருந்தாலே போதும்.

மிகச் சிலர்

பாப்பாவுக்கு எத்தனை எத்த னையோ விவேக வார்த்தைகள் தெரியும். ஆனால் அவற்றின் அர்த் தத்தை அறியக் கூடியவர்கள் இந் தப் பரந்த உலகில் மிகச் சிலர் தான்.

முடியாது

உன் பாத மலர்களுக்கு ஏற்ற பொன்மனை இங்கே இருக்கிறது. ஆனால், உன் பாதங்களை இங்கே காணேம். தீனர், திக்கற்றவர், தாழ்ந்தோரிடையே உன் மலர்த் தாள்கள் தங்குகின்றன. தீனர், திக்கற்றவர், தாழ்ந்தோ ரிடையே கந்தை உடுத்தித் திரியும் நின்னடி களைச் செருக்குடையவர்கள் என் றும் சேரவே முடியாதே!

தாமதியாதே

இந்தச் சிறு மலரைப் பறித் தெடுத்துக் கொள்! தாமதியாதே. அம்மலர் வாடி மண்ணில் விழுந்து மறையும் என்று அஞ்சுகிறேன்.

நகை விலங்கு

ஆடையால் அலங்கரிக்கப்பட்ட குழந்தை, கழுத்தில் தொங்கும் நகைச் சங்கிலியால் விளையாட்டின் சுதந்திர இன்பத்தை இழக்கின்றது. அவன் ஆடையே படிக்கும்படி பெருந் தடையாக விளங்குகின்றது. தூசியில் ஆடை மாசு படியுமோ என்று கவலையுற்று, உலக இன்பத்தை அனுபவிக்கப் பின்வாங்குகிறது குழந்தை. அன்னையே நகையை விலக்கு. மண்ணில் இன்பமளிக்கும் தூசியை நான் இழக்கிறேன். உலகப் பெருவாழ்வில் நுழையும் உரிமையையும் நான் இழக்கிறேன்.

தூய்மையற்ற நிலை

சுமையின் பொறுப்பை ஏற்றுக் கொள்பவனிடம் உன் கவலையை ஒப்படைத்துவிடு. அதை வருந்தி திரும்பிப் பார்க்காதே. உன் ஆசை உள்ளொளியை அணைக்கிறது. அது தூய்மை யற்ற நிலை. அருட் காதலில் விளையும் கொடைகளை மட்டும் ஏற்றுக் கொள்.

பற்றற்ற வினை

பற்றற்ற வினை என்பதே சிறந்தது. அது ஒருபொழுதும் வலிமை குன்றிப் போகாது. அது ஒரு காலும் சிறுமைப் படாது. ஆனால் அந்த வினையின் விளைவை ஒருவன் தனக்காக மட்டும் கோருதல் கூடாது.

குழந்தை கூறுகிறது

அப்பாவின், பேனாவையோ பென்சிலையோ எடுத்துக்கொண்டு, அவருடைய புத்தகத்தில் நானும் அவரைப்போல் அ, ஆ, இ, ஈ என்று எழுதினால், அம்மா! நீ ஏன் என் மேல் எரிந்து விழுகிறாய்? அப்பா எழுதும்போது மட்டும் வாய் திறப்பதே இல்லையே! அம்மா! அப்பா, கத்தை கத்தையாகக் காகிதத்தை வீணாக்குவதை, நீ சிறிதும் பொருட்படுத்துவதில்லை! ஆனால் நான் கப்பல் செய்ய, ஒரே ஒரு காகிதத்தை எடுத்தாலும், 'குழந்தாய், எத்தனை தொல்லை, உன்னால்' என்று கூறுகிறாய்! காகிதம் முழுவதும், இரு பக்கங்களிலும், அப்பா கறுப்புக்

கறுப்பாகக் கிறுக்கி, எத்தனையோ காகிதங்களை வீணுக்கிக் குவிக்கிருரே, அதுமட்டும் என்னவாம்?

நாம் சொல்வோம்!

பணக்காரர்கள் செல்வச் செருக்கிஞல் நம்மைத் துன்புறுத்துவதற்காகக் கையை முஷ்டி பிடித்துக் கொண்டும், பெருந் தடியை எடுத்துக்கொண்டும் வந்தால், நாம் புன்னகை செய்து கொண்டே, "சிசுக்களைப் பயமுறுத்தும் உங்கள் கோபம் எங்களை ஒன்றும் செய்யாது. நாங்கள் அச்சத்தை அகற்றியவர்கள்" என்று கம்பீரமாய்ச் சொல்வோம்.

அவர்கள் பழகட்டும்

தங்கள் பேராசைகளாலும், பொறுமைகளாலும் அவர்கள் (பெரியவர்கள்) கொடியவர்களாகி விட்டனர். அவர்களுடைய வார்த்தைகள், ரத்த வெறி பிடித்த மறைந்து கிடக்கும் கொடிய கத்திகள் ஆகும். என் குழந்தாய்! சினத்துடன் முகம் சுளிக்கும் அவர்களுடைய கொடிய நெஞ்சங்களுக்கிடையே நீ சென்று கம்பீரமாய் நில்! பகல் நேரத்துப் பூசலின்மேல், பரவிவரும் அந்தி வேளையின் மன்னிப்பை யருளும் அமைதியைப் போல, உன் சாந்தம் நிறைந்த கண்கள், அவர்கள் மேல் தங்களுடைய மென்னொளியைப் பொழி

யட்டும். உன்னை நேசிப்பதிலே, அவர்கள் ஒருவரை யொருவர் உள்ளன்போடு நேசிக்கப் பழகட்டும்.

குழந்தையின் உலகம்

என் குழந்தையின் தனி உலகத்துக்கு நடுவில், சாந்தி நிலவும் ஒரு சிறிய மூலே கிடைத்தால் கூடப் போதும். அவ்வளவு ஆசை எனக்கு! அந்த விந்தையான உலகில், அவனுடன் பேச விண்மீன்கள் கூட முன்வரும். அவன் முகத்தையே நெருங்கி, தன் வான விற்களையும், பித்துப் பிடித்த மேகங்களையும் காட்டி அவனை ஆனந்தப்படுத்த வானம் முன்வரும்!

மனிதனின் உலகம்

மனிதனுடைய உலகம் அமராவதி. அங்கே திகழும் உண்மை என்னும் கருவூலம் ஒரு நாட்டிற்கோ அல்லது ஒரு காலத்திற்கோ உரியதன்று. மனிதன் தன் இன்பத்திற்காக என்றென்றும் இந்தப் பொன்னுலகை விதம் விதமாக அமைக்கப் பார்க்கிறான். இதற்கு அடிப்படையாக உள்ளது, மனிதன் தன் அவாவை உருவாக்க எடுத்துக் கொள்ளும் எல்லையற்ற துணிவே. ஆனால் பெரியதோர் பொருளை நிருபிக்கப் போய், மனிதன் கையாளும் சிறு கள்ளத்தனமே கோபத்தை விளைவிக்கின்றது. மனிதனுடைய விருப்பம் முடிவற்றது.

அந்தச் சக்தி குறுகிய வழியே தன் போக்கில் வழிந்து ஓடுமாயின் இரு புறமும் உள்ள கரையும் சரிந்து விழும்; அழிவின் வெள்ளம் நாடெங்கும் பாயும். மனிதனுடைய பேரவாவானது குறுகிய தன் நலத்திற்காக இருக்குமானால், அதுவே உலகில் அமைதியின்மையை உண்டாக்கும். எல்லோரும் பயனடையும் அளவில் இருந்தால்தான் மனிதனுடைய ஆசை, முயற்சி யாவும் ஈடேறும்.

ஆற்றின் ஆசை

ஆற்று நீர் ஓடும்பொழுது எழும் ஓசையானது அதன் அசைவின் மொழியே. அது பறந்து செல்லும் வண்டின் சிறகொலி போன்றது.

என் பாடல்

குழந்தாய்! உன் கனவுகளுக்கு இரு சிறகுகளை அமைத்து, எவரும் பார்த்தறியாத அதிசய உலகுக்கு உன் உள்ளத்தை என் பாடல் இழுத்துச் செல்லும். என் பாடல், உன் வாழ்க்கைப் பாதையில் இருள் நிறைந்திருக்கும்போது,உன் தலைக்கு மேல், வழி காட்டும் பேரொளியாகவே மின்னிக்கொண்டு வரும். என் பாடல், உன் கண்களின் கருமணிகளில் கலந்து எந்த விஷயத்தையும் ஆழ்ந்து, ஊடுருவிப் பார்க்கும் சக்தியை உனக்கு அளிக்கும் மரணத்தில், என குரல் ஓய்ந்து போனாலும், என் பாடல், உன் உள்ளத்

தில், இடையருது உயிர் நாடியாகவே ஒலித்துக்கொண் டிருக்கும்.

அவன் இருக்கும் இடம்

முரட்டு நிலத்தில் ஏர் கட்டி உழுபவர்களிடம் அவன் இருக்கிருன், சாலை அமைக்க, கல் உடைக்கும், அவர்களிடம் அவன் இருக்கிருன். அவர்களுடன் அவன் வெய்யிலில் வாடுகிருன்; மழையில் நனைகிருன். அவன் ஆடையில் அழுக்கேறி யிருக்கிறது. உன் வெளிவேடத்தை கலைத்துவிடு; அவனைப் போலவே நீயும் புழுதியில் இறங்கி வா!

மனிதனின் அறிவு

மனிதனது அறிவு, உலகத்தைத் தன் ஆட்சிக்குள் அடக்கிப் பல தொழில்களில் வெற்றி பெற்று வருகிறது. என்ன பரந்த வன்மை அதற்கு! அது விரும்பும் பொருள்களுக்கு முடிவில்லை; தரும் பொருள்களுக்கும் ஓர் அளவில்லை.

விஞ்ஞானம் என்னும் தூய தவத்தின் மூலம் கோலிய வழி எல்லா நாட்டிற்கும், எல்லா காலத்திற்கும், எல்லா மக்களுக்கும்தான். மனிதனுக்கு அது தெய்வீகச் சக்தியைக் கொடுக்கிறது. பிணி, பசி இவற்றை மனித உலகினின்று அறவே ஒழிக்கப் படைக்கலங்களை

உண்டு பண்ணுகிறது. மனிதனுடைய சொர்க்கத்தை நிறுவும் விசுவகருமனே இந்த விஞ்ஞானம். ஆனால் இந்த விஞ்ஞானம் தொழிலின் உருவுகொண்டு மனிதனுடைய ஆசையை அளவுக்கு மீறித் தலை தூக்க விடுமாயின், அதுவே யமனாக மாறிவிடுகிறது. இப்புவியில் மனிதன் அடியோடு அழிந்து மறைவானே யானால், இதனாலேயே அந்த அழிவு நேரவேண்டும்.

சுதந்திரம்

சுதந்திரமே எனது தேவை, ஆனால் அதை நம்பியிருக்க நான் வெட்க மடைகிறேன்.

உண்மை அநுபவம்

இந்தக் காலத்தில் ஐரோப்பாவில்தான் மனிதன் பல துறைகளில் உயிரும் உணர்வும் பெற்று மகிழ்கிருன். இதன் பொருட்டே உலகெங்கும் அவன் ஆடம்பரமாக அறிவு ஒளி பரவச்செய்கிருன். அவ்வொளி பட்டு நாற்றிசையும் பளிச்சென்த் திகழ்கின்றன. துளி எண்ணெய்விட்டு ஏற்றிய அகல்விளக்கு, சற்றே ஒளி தருமே தவிர அந்த மங்கலில் மனிதனுடைய முழு உருவமும் தென்படாது. இவ்வாறு தெளிவற்றிருப்பது படைப்பின் உலோபித்தனம் என்றே சொல்ல வேண்டும். முன்னுக்கு வராமல் தயங்குவது மானிட தருமத்தின்

அழிவையே காட்டும். உயிர் வகையில் மனிதன் ஒளி படைத்த இனத்தைச் சேர்ந்தவன். மற்ற ஜந்துக்கள் இன்று உயிர் வாழ்கின்றனவே தவிர அவற்றின் இயல்பில் சற்றேனும் அறிவு ஒளி தீண்டவேயில்லை. மனிதன் தன் உயிரைப் பத்திரமாகப் பாதுகாப்பது மட்டுமன்றி, அதன் உயர்வை வெளியே காட்டுகிறான். வெளிப்படையாக ஆக்குவதற்கு உயிர் ஒளி பெறவேண்டும். அளவற்ற வாழ்விலிருந்தே - உயிர்ச் செல்வத்தி லிருந்தே - இந்த ஒளி தோன்றும். இந்த யுகத்தில் ஐரோப்பாவில்தான் எத்திசையிலும் இவ்வொளியின் கிரகணங்கள் பரந்திருக்கின்றன. அங்கே மனிதன் வெறும்

வயிற்றுப் பிழைப்போடு நில்லாமல் மேற்கொண்டு அநேக முயற்சிகளில் ஈடுபடுகிருன். உயிரைக் காப்பது ஓர் அளவுக்கு உட்பட்டது; உயிரை வெளிக் காட்டுவதற்கு அளவே யில்லை. ஐரோப்பாவில் வாழ்வானது அளவுக்கு மீறியதோர் உண்மை அநுபவம்.

அழகு

அழகு, அழகு என்று அங்கலாய்க்கிருேம், ரசித்துப் பேசுகிருேம். ஆனல், அழகுள்ளவை, நாம் எண்ணுவதுபோல அவ்வளவு பிரயோஜனப் படுபவை யல்ல. உதாரணம வேண்டுமா ? மயிலையும், தாமரையையும் பாருங்கள் !

குழந்தை உலகம்

எல்லைகள் எல்லாவற்றையும் கடந்து, குழந்தை மன உலகின் வழியே செல்லும் பாதையில் நானும் போகலாம் என்றால் எவ்வளவு அருமையாக இருக்கும்? அங்கே அறிவு தன்னுடைய நீதிகளைப் பட்டங்களாக்கிப் பறக்க விடுகின்றது. சத்தியம், உண்மை நிகழ்ச்சிகளின் தளைகளை அறுத்து விடுகின்றது.

மாறிவிடுவார்கள்

சீதையும் சரி, சாவித்திரியும், சமயம் வரும்பொழுது திரௌபதியாகவும், குந்தியாகவும் மாறிவிடுவார்கள்.

எங்கள் வியாபாரம்

செட்டான பேர்வழிகள் ஒரு விஷயத்தை மட்டும் அடிக்கடி மறந்து விடுகிருர்கள். அவசியத்திற்கு ஏற்ற பயன் கைகூட வேண்டுமானல் அளவுக்கு மீறிய முயற்சி வேண்டுமென்பதைத்தான். இந்த உண்மையை மாரிக்காலத்துப் பயிர் நிலங்கள் எடுத்துக் காட்டுகின்றன. நமக்கு வேண்டியதென்ன? வயிற்றுக்குப் போதுமான உணவு. இந்தச் சிறு விருப்பம் தானியக் கதிராக நம் எதிரில் உருவெடுத்து வரும் பொழுது, மழை செதும்பப் பெய்த மண்ணகத்தின் இனிய பசுமை நம்முடைய அந்த உணவு விருப்பத்தை

யும் அடக்கி விடுகிறது. கைப்பிடி பிச்சைக்கூட கிடைக்காத போது செல்வத்தின் கஞ்சத்தனம் பிடி பிச்சைக்குமேல் வழங்க மறுத்து விடுகிறது. உயிரும், உள்ளமும் மூலப் பொருளாக வைத்து நடத்தும் எங்களது வியாபாரத்தின் கருத்து, மீண்டும் உயிர்பெறுவதே யாகும். இது வீண் என்று பிறருக்குத் தோன்றலாம். நம்மில் துறவு மனப்பான்மையுள்ளவர்கள் இந்த வீண் போக்கை இகழ்கிறார்கள். ஆனால் இதில் தானே இருக்கிறது கவிகளின் கொண்டாட்டம்! செலவுக்கு மீறிய கையிருப்பைக் கடைசிக் காசுவரை விரயம் செய்யும் துணிவு எங்களுக்குத்தான் உண்டு. இந்த அதிகச்

செலவு போகத்தை விரும்பச் செய்வது அன்று; துணிவான செயலில் உள்ள ஆனந்தத்தை நுகர்வதற்கே. மனிதனுக்கு நெஞ்சு உரம் வளர வளர அவன் மனிதப் பிறவி எடுத்த தன் பயனை அடைகிறான்.

கயவரின் முயற்சி

சூரியனைவிட மேகங்கள் சக்தி வாய்ந்தவை அல்ல; நீடித்தவையும் அல்ல. மேகங்கள் எவ்வளவு பெரியதா யிருந்த போதிலும் சூரியனை அடியோடு மறைத்துவிட முடிவதில்லை. இதைப் போன்றதுதான் ஒரு நல்ல மனிதனைத் தலை தூக்க வொட்டாமல் அடிக்கும் கயவர் கூட்டத்தின் முயற்சியும்.

சமம்

மிரட்டிக்கொண்டு போவது புருஷர்களின் சுபாவம். ஆதரவுடன் அணைப்பது பெண்களின் தன்மை. அப்போதுதான் எடை சரியாக இருக்கும். ஒரு பக்கம் குறைந்தாலோ அதிகமானாலோ குட்டிச் சுவர்தான்.

மனிதன் தேடுகிறான்!

மனிதன் பாடுபட்டு உயிர் வாழ முயல்கிறான். ஆனால் உயிர் என்னவோ தங்காமல் போய்விடுகிறது. அதற்காகவே இந்த அற்ப வாழ்வில் சிலகாலமாவது தென்பாக இருக்க உயிரிலும் எவ்வளவோ உயர்வான தொன்றைத் தேடி அலைகிறான்.

கானகம்

கானகத்திற்கே ஒரு தனியான மாய ரூபம் உண்டு. மரம் செடி கொடிகள் ஓசைப்படாமல் நம்மை மயக்கச் சதி செய்யும். அங்கேதான் தொன்மையான ஜீவனின் மந்திர கோஷம் திகழ்கிறது. பகல் வேளை களில் கானம் கல்லென்று உச்சஸ் தாயியில் ஒலித்துக்கொண் டிருக் கும். இருளாகிய சிறகு போர்த்துக் கங்குல் கவியும் பொழுது வனப்பிர தேசம் இழுமென அமர்ந்து ஓசை செய்யும்; அது அறிவுடைய உயிரி னம்போல் பேசும், சிரிக்கும், அழும். வெகு புராதனமான அந்த ஆத்மா தன் இன்ப துன்பங்களைச் சொல்லிக்

கொள்ளும் மொழி நம்மைத் திகைக்கச் செய்கிறது.

பொய்யான மாயம்

ஆறுதல்கள் நிதானமாகத்தான் மூளையில் ஏறுவது வழக்கம். பொய்யான மாயம், எதிரே அத்தாட்சியிருந்தும் அதை நம்பாமல் நம்பிக்கையை இரு கையாலும் இதயத்தோடு தழுவிக்கொண்டுதான் நிற்கும். ஒருநாள் இதய ரத்தத்தையெல்லாம் குடித்துவிட்டு அது ஓட்டம் பிடிக்கிறது. அப்பொழுது புத்தி வருகிறது. மீண்டும் பழைய பாசத்தின் மேலேயே நாட்டம் செல்கிறது - அந்த வலையில் சிக்கி மனம் அல்லலுறுகிறது.

காண முடியும்

இக்கால மனிதன் மனத்தை நன்முறையில் நிலைக்க விடாது கண்ட கண்ட பொருள்கள்மீது செலுத்தி, அவற்றைப் பெற அளாவி தன்னையே மறந்து, தருக்கித் திரிதலைக் காண்கிறோம். அவன் சமூகம், நாடு, வாணிபம், அரசியல், போர் முதலிய செயற்கைத்தொழில் களிலும், பெருநலன்களிலும் ஈடு பட்டு அலைதலைக் காண்கிறோம். இந்நிலையில் அவன் பேரழகினைப் பெருமிதத்தோடு காண்பது எவ் வாறு? இவற்றினிடை இருப்பினும் தூய ஆண்மை நிலையோடு இருப் பின், அவன் பேரழகினைப் பெருமை யுடன் காணல் இயலும்.

உரிமை

அவனைப் பற்றி நீங்கள் எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள். என் குழந்தையின் குற்றங் குறைகள் என்ன என்பதை நானே உண்மையில் அறிவேன். அவன் நல்லவன், கெட்டிக்காரன் என்பதற்காக அவனை விரும்பவில்லை. அவன் என் குழந்தை என்பதற்காக விரும்புகிறேன். நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள்! அவன்மீது குறை கூறவும், அவனைத் தண்டிக்கவும் உங்களுக்கும் உரிமை இல்லை. அந்த உரிமை எனக்குத்தான்! அணைக்கும் கைதான் அடிக்கவும் உரிமை யுடையது!

இயற்கை

அங்கே உதய சூரியனின் இளங் கதிரொளியில் பசும் புற்றரையில் பூத்த மலர்களிலே, முத்துக்கள் ஒளி வீசித் துடித்து நிற்கின்றன. அவை புற்களின்மேல் உதிர்ந்தும் கிடக்கின்றன. மிகக் கொடிய கடலலைகள் வீசி எறியும் துளிகளிலே முத்துக்கள் மணலில் வாரி இறைக்கப்படுகின்றன.

வாழ்த்து!

விண்ணின் முத்தத்தை மண்ணுலகிற்குக் கொண்டுவந்த சிறந்த கள்ளங் கபடமற்ற இந்த வெள்ளையுள்ளத்தை-மாசு மறுவற்ற இந்தச் சின்னஞ்சிறு உயிரை, வாழ்த்து

வாயாகா! பரிதியின் பொன் ஞெளியை அவன் விரும்புகிருன்; தாயின் இன்முகத்தைக் காண ஆசைப்படுகிருன். மண்ணை வெறுக்கவும், பொன்னை விரும்பி தேடியலையவும் அவன் பழகவே இல்லை. அவனை உன் இதயத்தோடு அணைத்து வாழ்த்துவாயாக!

மனிதனின் இயல்பு

யுகந்தோறும் புதிய புதிய சிருஷ்டிகளால் தன்னுடைய வளர்ச்சியைக் காட்டுவதே மனிதனின் இயல்பாகும். பழைய வழக்கங்கள் என்ற சிறைக் கூண்டில் அவன் சதா உழன்றுகொண்டிருக்க முடியாது.

அசட்டுப் பாப்பா

அம்மா! உன் பாப்பா சுத்த அசடு! அவளது குழந்தைத் தனத்தை என்னவென்று சொல்வேன்.

கூழாங் கற்களை வைத்துக் கொண்டு நாங்கள் உண்ணும் விளையாட்டு விளையாடினால், அவை உண்மையான தின்பண்டங்கள் என்று, அவள் அவற்றை வாயிலே போட்டுக்கொள்ளப் பார்க்கிறாள்.

அவள் எதிரே புத்தகத்தைத் திறந்து, 'அ, ஆ, இ, ஈ' படிக்கச் சொன்னால், அவள் பக்கங்களைக் கிழித்து விட்டு எதையோ கண்டவள்போல சிரிக்கிறாள். இதுதான்

உன் பாப்பா படிக்கும் அழகு அம்மா! உன் பாப்பா சுத்த அசடு! அவள் குழந்தைத் தனத்தை என்ன வென்று சொல்வேன்.

மறந்து விட்டேன்!

குழந்தாய்! வெறும் குச்சியையும், மண் பிட்டையும் வைத்துக் கொண்டு விளையாடுவதில், தன் நினைப்பின்றி ஒன்றிவிடும், அற்புதக் கலையை நான் மறந்து விட்டேனே! அதற்குப் பதில் வீணை, விலையுயர்ந்த விளையாட்டுப் பொருள்களைத் தேடி திரிகின்றேன்; பொற்கட்டிகளையும், வெள்ளிப் பாளங்களையும் சேகரித்துக் குவித்துக் கொண்டே யிருக்கிறேன். உனக்கு கிடைப்பனவற்

றைக் கொண்டு, ஆனந்தமான உன் விளையாட்டுக்களை நீயே உண்டு பண்ணிக்கொள்ளுகிறாய் எனக்குக் கிடைக்காத பொருள்களைத் தேடுவதில் என் நேரமும், பலமும் வீணே அழிகின்றன. என் துர்ப்பலமான தோணியினால், ஆசைக் கடலைக் கடக்க நான் தவித்துத் திணறுகிறேன். என் முயற்சியும் வெறும் விளையாட்டுத்தான் என்பதை ஐயோ நான் மறந்துவிட்டேன்.

பெண்கள்

ஒரு கணத்தில் ஜாதியையும் மீறிப் போகக் கூடியவர்கள் பெண்கள்தாம்.

அம்மா பயப்படாதே!

அம்மா, பார்! பகல் பொழுது சாய்வதற் குள்ளேயே இருள் சூழ்ந்து விட்டது. அதோ, அந்தக் கிராம வீதியில் ஒரு வழிப்போக்க னைக்கூட காணவில்லையே! இடைப் பையன் மேய்ச்சலி லிருந்து ஆடு மாடுகளை ஓட்டிக் கொண்டு வந்து விட்டான். குடியானவர்கள், வயலி லிருந்து திரும்பி,வீட்டுத்தாழ்வாரங் களிலே பாயை விரித்து உட்கார்ந்து கொண்டு, பயங்கர தோற்றமளிக் கும் மேகக் கூட்டங்களைப் பார்த்து விழிக்கிறார்கள். புத்தகங்களையெல் லாம் அலமாரியில் எடுத்து வைத்து விட்டேன். அம்மா! "போய்ப் படி!" என்று என்னை விரட்டாதே!

நானும்வளர்ந்து,அப்பாவைப்போல பெரியவ ஞனதும் என்னென்ன படிக்க வேண்டுமோ, அவற்றை யெல்லாம் படித்து அறிந்து கொள் வேன். பயப்படாதே! அம்மா!

பிச்சைக்காரா !

என்னை வாழ்விக்க வந்த சின் னஞ் சிறு உயிர் அரும்பே, நீ சிரிப் பதன் விந்தைதான் என்ன? என் உயிரின் உறைவிடமாகிய, சின்னஞ் சிறு மொட்டே, நீ சிரிப்பதன் கார ணம்தான்என்ன? ஏ, பிச்சைக்காரா! உன் இரு கரங்களாலும், அன்னை யின் கழுத்தைக் கட்டித் தொங்கும் நீ, அவளிடம் எதை கெஞ்சி கேட்கி ருய்?

இன்பம்

ஒளியை நிழல் துரத்திச் செல்வதும், கோடையைத் தொடர்ந்து மழை வருவதுமான இந்தச் சாலை வழியே காத்திருப்பதே எனக்கு இன்பம்.

நதியும், மலையும்

வேகமாக முன்னேக்கிப் பாய்ந்து, தடைகளை யெல்லாம் தகர்த்தெறிந்துகொண்டு ஆனந்தமாகப் பாடிக்கொண்டே செல்கிறது நதி. ஆனல், அசைவற்று, பழைய நாட்களை நினைத்து, தன் அன்பினுல் மட்டுமே நதியைப் பின் தொடர்கிறது மலை.

கைத்திறம்

மனிதன் தனக்கு உளதாகும் அறிவுப் பெருக்கம் ஒரு வகையில் அளவுக்கு மேற்படுமாயின் அதனைத் தன் உணர்வினின்றும் வெளிப் படுத்துகிறான். அங்ஙனம் வெளிப் படுத்தல் படத்தின் வாயிலாகவோ, கட்டடத்தின் வாயிலாகவோ, பிற செய் பொருள்களின் வாயிலாகவோ நடைபெறும். இங்ஙனம் வெளிப் படுத்தலால் உருப்பெறும் ஒன்றே கைத்திறம் அமைந்த ஒன்று ஆகும். இக்கைத்திறம் பணத்தின் பொருட்டு உண்டாவதன்று. பிற போக பாக்கியங்களின் பொருட் டும் உண்டாதல் இல்லை. இஃது

அறிவு வளர்ச்சியின் அளவு மிகுதி யாற்ருன் உண்டாவது.

குழந்தையின் ஆசை

ஆலமரமே! இலைகள் சலசலக்கும் உன் கிளைகளிலே புகுந்து விளையாடும் காற்ருகிவிட வேண்டும் - பொழுது சாயச் சாய நீண்டு வந்து நீரில் படியும் உன் நிழலாகிவிட வேண்டும் - உன் உச்சாணிக் கிளையில் இருக்கும் ஒரு பறவையாகிவிட வேண்டும் - நிழல்களுக்கு இடையேயும், நாணல்களுக்கு இடையேயும் வாத்துக்களைப்போல மிதந்து வர வேண்டும் - என்றெல்லாம் நான் ஆசைப்பட்டதை எவராலும் அளவிட முடியாது.

புதிய ஏகாதிபத்தியம்

ஆரியர்களும், முகம்மதியர்களும் இங்கிருந்த திராவிட இராஜ்யங்களையும், இதர இந்து இராஜ்யங்களையும் வென்றபோதிலும், அவர்கள் இந்நாட்டிலேயே வசிக்க ஆரம்பித்து மக்களுடன் கலந்து விட்டனர். ஆனால் இப் புது ஏகாதிபத்தியம் வேறு விதமாக இருந்தது. ஐரோப்பியர் நம்மை ஆண்டனரே ஒழிய நம்முடன் கலக்கவில்லை. இந்நாடு அவர்களுக்குச் சொந்தமாயிற்றே தவிர, அவர்கள் அதனுடன் உறவு வைத்துக்கொள்ளவில்லை. பாரத நாட்டின் செல்வம் ஈவு இரக்கமற்ற வகையில் அப

கரித்துச் செல்லப் பட்டதுடன், அதன் ஐக்கியமும் வெகுவாகக் குலைக்கப்பட்டது.

ஆரியர் வருகை

ஆரியர்கள் பிற்காலத்தில் இந்தியாவின் வடமேற்குக் கணவாய்களின் வழியாக பாரத நாட்டிற்குள் வந்து பஞ்ச நதி தீரத்தில் முதன் முதலாகத் தங்களுடைய வாசத்தை ஏற்படுத்திக்கொண்டு, பிறகு கிரமமாக விந்தியாசலப் பிரதேசத்தைக் கடந்து, காந்தாரம் முதலிய தேசங்களையும் தங்கள் வசமாக்கிக் கொண்டபொழுது பாரத தேசம் முழுவதும் ஒரே நாகரிகத்தின் ஆதிக்கத்துக்குட்பட்டது,

தைரியம் வேண்டும்

எந்த மக்களுடைய நாகரிகத்தின் அஸ்திவாரம் உள்நாட்டு வித்தியாசங்களால் பிளவுபட்டிருக்கிறதோ, எந்த மக்கள் மனதில் விவேகம் சற்றுமின்றி குறிப்பிட்ட சில தீர்த்தங்களில் சில நாட்களில் ஸ்நானம் செய்தால் பாவ மூட்டைகளைப் போக்கி விடலாமென்று நம்புகின்றனரோ அவர்கள் இந்தச் சாதனையை மனதாலும் நினைக்கத் தகுந்தவர்கள் அல்லர். நமக்குள் வளரும் எதிரிகளை அடக்குவது தான் ஆண்மையின் அறிகுறி. புறப் பகைவர்களை வெல்லுவதைக் காட்டிலும் இதற்கு அதிக தைரியம் வேண்டும்.

சுயநலக் கூட்டம்

பரந்த இத்தேசத்தில், தங்களைச் சூழ்ந்திருக்கும் வறுமையையும் பிணியையும் சற்றும் கவனியாமல், தாங்கள் மாத்திரம் முன்னேற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் ஜபம், தபம், தியானம், யோகம் முதலியவற்றால் சதா ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஒரு கூட்டத்தார் உண்டு.

அரசியல் வாதிகள்

அரசியல் வாதிகள் தங்கள் நோக்கங்களைச் சாதித்துக் கொள்வதற்கு எத்தகைய தீய காரியங்களையும் செய்யத் தயங்குவதில்லை. தெய்வத்துக்கு அவர்கள் சற்றும்

பயப்படுவதில்லை. ஆகவே அவர்களுடைய திறமையை நாம் ஒப்புக்கொள்கிறோமேதவிர அவர்களிடம் நமக்கு எள்ளளவு மரியாதை உண்டாவதில்லை.

மேனாடுகள்

மேனாடுகள் வீணே பிற நாடுகளைக் கைப்பற்ற விழைந்து, மனித இயல்பிற்கே மாறான இயந்திரங்களையும், விஷ வாயுக்களையும், புதியன புதியனவாக உண்டாக்கிக்கொண்டே போகின்றன. இவற்றால் நாட்டுச் செல்வம் நன்மைக்கு உரிய வழிகளில் செலவழிக்கப் படாமல், மக்களிடையே அமைதி சிதறுகின்றது.

துயரக் கதை

அன்னிய நாட்டினரின் படையெடுப்புக்கள் காரணமாக, இந்திய மக்களிடையே பல பிளவுகளும், விரோதங்களும் ஏற்பட்டன. இந்தியர்கள் தங்களுடைய சொந்த நாட்டு எதிரிகளை ஒழிப்பதற்காக அன்னிய நாட்டினருடன் சேர்ந்து கொள்ளலாயினர். ஆகவே, இந்திய சரித்திரமானது, நம் நாடு கிரமமாக செல்வத்திலும், ஒற்றுமையிலும், பண்பாட்டிலும் க்ஷீணித்து வந்ததை விவரிக்கும் ஒரு துயரக் கதையாக ஆகிவிட்டது. இத்தகைய க்ஷீணத்துக்குக் காரணம் நமது ஒற்றுமைக் குறைவே என்பதை

அறிந்துகொள்ளப் பல நூற்றாண்டு கள் பிடித்தன.

காந்திஜி

காந்திஜியின் வாழ்க்கை சத்தியம் என்ற அஸ்திவாரத்தின்மீது நிர்மாணிக்கப் பட்டதாகும். அது கர்ணனுடைய கவசத்தைப்போல் அவருடன் கூடவே பிறந்ததென்று சொல்லலாம். கொள்கைகளும், அபிப்பிராயங்களும் மாறி மாறி வரும் இக்காலத்தில் சத்தியத்திலிருந்து சற்றும் வழுவாத இவ் வுத்தமனின் வாழ்க்கையைக் காட்டிலும் நம்மைப் புனிதமாக்கும் சக்தி வேறெங்கு தோன்றப் போகிறது?

மக்களின் தியாகம்!

மிதமிஞ்சிய மதப் பிரச்சாரத்தால் சில தீங்குகள் ஏற்பட்டன. நமது மக்கள் மதப்பற்று மிக்கவர்களாகி இவ்வுலகத்தில் தாங்கள் அடைய வேண்டிய அறம் பொருள் இன்பங்களை மறுமைக்காகத் தியாகம் செய்யத் தொடங்கினுர்கள்.

இழிவு

ஆவணி மாதத்தின் கருமுகிலிற்குச் சண்டாளன் என்று இட்டதனுல் அதன் உயர்வு குறைந்து போகுமா? அதன் நீர் சுவையற்றதாகுமா? இழிவாக உன்னை நினைத்துக் கொள்ளாதே!

தெரிந்துகொள்

ஜெபமாலை உருட்டுவதை விட்டு விடு! மந்திரமும், தந்திரமும், ஆடலும், பாடலும் ஆண்டவனைக் காட்டமாட்டா! தாளிட்ட, அடைப்பட்ட கோயிலின் இருண்ட மூலையில் எவரைப் பூசிக்கிறாய்? உன் கண்களைத் திறந்து, உன் கடவுள் உன் முன்னிலையில் இல்லை என்பதைத் தெரிந்து கொள்.

என் போர்வை

என்னை மூடியிருக்கும் போர்வை, புழுதியும் மரணமும் கலந்த போர்வை; அதை நான் வெறுத்தாலும், இன்னும் அதை அன்போடு பற்றி யிருக்கிறேன்.

இதயக் கோயில்

யாத்ரீகன் பக்கத்து வீடெல்லாம் தட்டிப் பார்த்த பிறகே தன் வீட்டை அடைகிறான். அதுபோல் உன் இதயக் கோயிலை அடைய, பல வெளியுலகங்களைத் தாண்டித் திரிய வேண்டி யிருக்கிறது.

ஆனந்தம்

கோப மின்னல் தன் கூரிய நகங்களினால், வானத்தைக் கீறிக் கிழிக்கின்றது. மேகங்கள் உறுமிக் கொண்டு ஒன்றோடு ஒன்று உராய்ந்து இடிக்கும்போது நெஞ்சிலே பயங் கலந்த நடுக்கத்துடன், அம்மா! உன்னை இறுகக் கட்டிக் கொள்வதுதான் என்ன ஆனந்தம்!

விளக்கை ஏற்று

ஒளி, ஒளி எங்கே யிருக்கிறது? ஆசையின் ஆர்வ நெருப்பால் அதைத்தூண்டு. இதோ இருக்கிறது விளக்கு. ஆனால் அதில் ஒருபோதும் ஒளி சுடர் விட வில்லை—என் இதயமே இதுவே உனது கதி!

இடி இடிக்கிறது; வெட்ட வெளியில் ஓலமிடுகிறது காற்று. இரவு கருங்கல்போல இருள் செறிந்துள்ளது. இருட்டிலே நேரம் வீணாய்க் கழிய வேண்டாம். காதல் விளக்கை உன் உயிர்ச்சுடரால் ஏற்றி வை.

பேராசை

பேராசை அடியோடு அகற்றப் படல் வேண்டும். அஃது ஒரு நாட்டின் உயிர் நாடியாய் இருப்பின் அந்நாடு நாளடைவில்தேசப்படத்திலிருந்தே மறைந்துவிடும் என்பது உறுதி. பேராசை மக்கள் தொகுதிக்கே தீமையானது. அதனை அறவே அகற்றுதல் நன்மக்கள் கடனாகும்.

அவர்கள்

முகலாயப் பேரரசர் அரசியல் நிபுணர் மட்டும் அல்லர். அவர்கள் என்றும் அழியாத கைத்திறனை உலகிற்கு உணர்த்திய உத்தமர்களும் ஆவார்கள்.

உயிர் நாடி

செல்வப் பெருக்கமும் இயந்திர பலமும் நாகரிகம் என மேனாடுகளில் கருதப்படுகின்றன. உண்மை நாரிகம் என்பது மனிதனது தூய ஒளியே ஆகும். எளிய தன்மையும், குற்றமற்ற வாழ்வும், எல்லா உயிர்களையும் தன்னைப்போல் நேசிக்கும் மனப்பான்மையும் கொண்டுள்ள மனிதனே உண்மை நாகரிகத்தினைக் கொண்டவன் ஆவன். இங்கிலையிற்றுன் நம் முன்னோர் இந்திய நாட்டில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் பேராசை கொண்டு பிற நாடுகளைப் பிடித்திலர். செல்வத்தை நிலையுற்றதாக எண்ணி அதனைச் சேர்க்க முயன்றிலர்; செல்வம் நிலையற்ற

தென்பதை நன்கு உணர்ந்திருந் தனர். 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பதை அப்பெரு மக்கள் அறிந்தே இருந் தார்கள். தூய வாழ்க்கையும், போரொழுக்கமுமே மனிதனை உயர் நிலைக்குக் கொண்டு செல்பவை. அவை இரண்டுமே நாகரிகத்தின் உயிர் நாடி என்பதை அப்பெரு மக்கள் அறிந்திருந்தார்கள்.

நாகரிகச் சின்னம்

திமிர், படைப்பலம் இன்னவை உண்மை நாகரிகக் குறிகள் ஆகா. ஆன்ம அமைதியும் நேரிய வாழ்க் கையுமே நாகரிகச் சின்னங்கள் ஆகும்.

அவர்கள் நாகரிகம்

பணம் படைத்தவரே இறைவர் எனப் போற்றப் படுகின்றனர். பண்டைக் காலத்தில் சான்றோர்க்கு உரித்தாயிருந்த இடம், இன்று பணக்காரரால் கவரப்பட்டு விட்டது. ஒழுக்கத்திற்கு உரிய இடம், பணத்திற்கு உரியதாகி விட்டது. யாண்டும் 'பணம், பணம்' என்னும் ஒளியே பறை யோசை போலக் காதுகளைத் துளைக்கின்றது. இப் பணப் பித்து மனிதனது அமைதியான வாழ்வினை - நாட்டினது நன்னிலைமையினை - உலகத்தின் உயிர் நாடியாய் இருந்து ஒற்றுமையைச் சீரழித்துவிட்டது. இச் சீரழிந்த

நிலைமை 'நாகரிகம்' என இன்று போற்றப் படுகிறது. இதுதான் மேற்றிசை நாகரிகம்.

நிலையார்

இயந்திர வலிபெற்ற அந்நாடுகள் ஆன்ம உணர்வை இழந்து - இரக்கம், மனிதத்தன்மை, ஒற்றுமை என்னும் நாகரிகச் சின்னங்களை அறவே கைவிட்டு எளிய நாடுகளை விழுங்கும் இழிநிலைக்கு இறங்கி விட்டன. இயந்திர பலம் மக்களை விலங்கு நிலைக்கு கொண்டு வருவதாகும். அந்நிலை மேனாடுகளில் உண்டானது முதல் மேனாட்டார், தம்மை உயர்ந்தவர் என்றும், பிறரைத் தாழ்ந்தவர் என்றும், பிறர்

தமக்கு அடங்கி வாழவே பிறந்தவர் என்றும் எண்ணித் தவிக்கின்றனர். இவ்வெண்ணம் இயந்திர பலத்தா லும் பேராசையாலும் உண்டா னதே அன்றிப் பிரிதன்று. ஆன்ம அமைதி பெற்றவர் இங்ஙனம் நினையார்.

தவறுண்டா?

நம் பண்டையர், மேனாடுகள் அநாகரிக நிலையில் இருந்தபோது, உலகம் வியக்கத்தக்க உயரிய நாக ரிக நிலையில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் எவ்விதச் சட்டங்களை மக்களுக்கு விதித்தார்களோ அவற்றிலிருந்து இறையும் வழு வாது நடந்து வந்தார்கள். அவர்

கள் கோவில்களில் நல்உபதேசம் கேட்டு - ஆனால் அவ்வுரைகள் தந்நலத்தைப் பாதிக்கையில் கை நழுவவிடும் மேனாட்டாரைப்போல் இராமல் - இன்பத்திலும் துன்பத் திலும் அசையாது ஒரே நிலையில் நின்றனர் அம்மன உறுதியாற்றன் அப்பெருமக்கள் இன்றளவும் நம் அகத் தாமரையில் அமர இடம் பெற்றுள்ளார்கள். எல்லா நல் லுரைகளையும் நன்கு உணர்ந்த மேனாட்டார் உயிர்களின் பாவங் களுக்காகத் தம்மையே சிலுவையில் தத்தம் செய்த அடிகளின் அன்பு மதத்தைப் பின்பற்றி வரும் மேனாட்டார் இன்று, அன்பைப் பரப்புவதற்குப் பதிலாக இயந்திரங்

களையும், விஷ வாயுக்களையும் கோடிக் கணக்கான பவுன்களைச் செலவிட்டு பெருக்கி உலகத்தையே நாசம் செய்யத் துணிந்து நிற்கின்றனர். இக்கேவல நிலைமை 'நாகரிகம்' என்று வழங்கப்படுமாயின் அந்நாகரிகம் இந்தியராய நமக்கு வேண்டாம் எனக் கூறலில் தவறு உண்டோ?

அந்நாள்

பணப் பித்தும் இயந்திரப் பெருக்கமும் அதிகார வெறியும் மேனுடுகளை விட்டு அகலுமாயின், அன்றே உலகம் இன்ப நிலையில் இருத்தல் இயலும். அந்நாள் எந்நாள்?

நாகரிகம்

நாகரிகம் என்பது மக்கள் செந் நெறியில் வாழ்தற்குக் கொள்ளும் மனப்பான்மை ஆகும். இது புறத்தே இருந்து வருவதன்று. அகத்தே தோன்றி அருளொடு வளரும் இயற்கைத் தன்மை ஆகும். தலையைச் செவ்வையாய்ச் சீவிக் கொள்ளல், தூய உடைகளை உடுத்தல், மிகுந்த கல்வி யறிவுடைமை, இன்னபிற நாகரிகம் ஆகா. அன்பு அருள், ஆன்ம நினைவு, அற வொழுக்கம் ஆகியவற்றின் தொகுப்பே நாகரிகம் எனப்படும். மனிதனின் மெய்த் தன்மையே நாகரிகம் ஆகும்.

மழை நீர்

தாயை அலைக்கழிக்க வேண்டி சிரித்துக்கொண்டே ஓடிவிடும் சிறு குழந்தைகள் போல, குறுகிய சந்துகளின் வழியே மழை நீர் சிற்றோடைகளாக ஓடுகின்றது.

நான் உணர்கிறேன்

என் குழந்தாய்! உதய ஒளியில் விண்ணின்று பொங்கி வரும் ஆனந்த வெள்ளம் எத்தகைய தென்பதையும், கோடை காலத்தின் இனிய காற்று எப்படிப்பட்ட இன்ப உணர்ச்சியை என் உடலுக்களிக்கிறது என்பதையும், நீ சிரிக்க நான், உன்னை முத்தமிடும்போதெல்லாம் நன்கு உணர்கிறேன்.

பாப்பாவின் சிரிப்பு

பாப்பா துயிலும்போது அவன் இதழ்களிலே துடிக்கின்ற சிரிப்பு - அது எங்கிருந்து வருகிறதென்று எவருக்காவது தெரியுமா? தெரியும்! பனித்துளிகளில் குளித்துக்கொண்டிருந்த அருணோதயக் கனவில், நொடியில் மறையும் இலையுதிர்கால மேக மொன்றின் விளிம்பை, வளர் பிறையின் இள வெண் கிரண மொன்று தொட்டதாம். அவன் இதழ்களில் தவழும் சிரிப்பு, அந்தக் கனவில் தோன்றிற்று என்றுதான் வதந்தி.

தெரியாது

நீந்தத் தெரியாத குழந்தைகள்; அவைகள் வலை வீசவும் அறியா. முத்துக் குளிப்பவர்கள் நல்ல முத்துக்களைத் தேடி, கடலின் அடியை நாடிச் செல்வார்கள்; வணிகர்கள் கப்பலேறி, கடலைத் தாண்டுவார்கள். குழந்தைகளோ கூழாங் கற்களைச் சேகரிக்கின்றன; பின், அவற்றைச் சிதறவடிக்கின்றன; மறைந்திருக்கும் உயர்ந்த மாணிக்கத்தைத் தேடிச் செல்வதில்லை, அந்தக் குழந்தைகள். அவர்களுக்கு வலை வீசவும் தெரியாது.

குற்றவாளிகளாவோம்!

நூற்றுக் கணக்கான வருஷங்களாக, யாரையும் குறை கூருமல் தங்களுடைய நிலைமையைப் பொறுமையுடன் சகித்து வந்திருக்கும் நமது தாழ்த்தப்பட்ட சகோதரர்களிடம் அன்பும் ஆதரவும் காட்டுங்கள். அவர்களுடைய கதியைக் குறித்து நமது தெய்வீகத் தலைவர் (காந்தியார்) தமது துயரம் நிறைந்த குரலால் நம்மிடம் முறையிட் டிருக்கிருர். அவ் வுபதேசத்துக்கு நாம் செவி சாய்க்காவிட்டால், நம்முடைய நாகரிகத்தின் ஆணிவேரைக் களைந்த குற்றத்திற்கு நாம் உள்ளாவோம்.

வெட்கம்

குழந்தாய்! நீ எழுத முயன்ற போது உன் பிஞ்சு விரல்களிலும், முகத்திலும் மையைப் பூசிக்கொண்டாயே, அதற்காகவா அவர்கள் 'அழுக்கு' என்று கூறி, முகத்தைச் சுளிக்கிறார்கள். சீ! வெட்கம்! முழு நிலா தன் முகத்திலே, மை பூசி கொண்டதற்காக அதை அழுக்கு என்று அவர்கள் கூறத் துணிவார்களா?

இனிப்புப் பண்டங்கள் உனக்கு மிகவும் பிரியம் என்பது எவரும் அறிந்ததுதானே! அதற்கா உன்னை 'பேராசைக்காரன்' என்று கேலி செய்வது? உன்னிடம் எல்லையற்ற

அன்புகொண்டுள்ள எங்களை, அவர்கள் என்னதான் சொல்ல மாட்டார்கள்.

முன்னேறும் நாள்

மனித ஒற்றுமையில்தான் சுதந்திரத்தின் வித்துக்கள் காணப்படுகின்றன. நமக்குள் ஏற்பட்டிருக்கும் பலவிதப் பிளவுகளாலேயே நமது அடிமைத்தனம் பலப்பட்டு வருகிறது. பரஸ்பர நம்பிக்கையையும் அன்பையும் அடிப்படையாகக் கொண்டு - தொன்றுதொட்டு வரும் மூட நம்பிக்கைகளாகிய விலங்குகளைத் தகர்த்துவிட்டு - மனித நாகரிகம் முன்னேறும் நாள் நெருங்கி விட்டது.

வீழ்ச்சிக்குக் காரணம்

பணப் பைத்தியம் மக்களைவிட்டு அகலும் நாளே உண்மை நாகரிகம் உதயமாகும் நாள் ஆகும். பண்டை இந்தியாவில் செல்வத்துக்கெனத் தனி மதிப்பு இல்லை. அது மக்கட்கு இன்றியமையாததே ஆயினும், அதற்கு உரிய இடமென்று சமுதாயத்தில் உண்டு. அதற்கு முதல் இடம் இல்லை. இன்றோ எனின், அதுதான் முதல் இடம் பெற்றுள்ளது. இம்மாறுதலே இந்தியர் வீழ்ச்சிக்கும் உலக வீழ்ச்சிக்கும் உற்றதொரு காரணம் ஆகும்.

இசை

இசையைப் பிறமொழி ஒன்றின் மூலம் அனுபவிக்க விரும்புகிறவன் தன் காதலைக் காதலியிடம் தெரிவிக்க வழக்கறிஞர் வைப்பது போன்றதாகும்.

பிறந்த நாள்

சாதாரண மக்கள், குறுகிய சூழ்நிலையில் பிறந்து இறக்கும் வரை தங்கள் சுற்றத்தார்களுடனேயே காலங் கழிக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் அவர்களுடைய பிறந்த தினமும், ஒரு சில நண்பர்களாலும் உறவினர்களாலும் கொண்டாடப் படுகிறது. பெரியவர்களோ, பரந்த சூழ்நிலையில் தோன்றுகிறார்கள்.

அவர்களுடைய பெருமையை உல கத்திலுள்ள பல தேசங்களும் கொண்டாடுகின்றன. அவர்களு டைய பிறந்த நாட்களைக் கொண் டாடுவதன் மூலம், 'பெரியோர்கள் உலகத்திற்கு உரியவர்கள்' என்ற கொள்கையை நாமும் கடைபிடிக்கி றோம்.

பெருமைக்குக் காரணம்

மகாத்மா காந்தி அடைந்துள்ள தனிப் பெருமைக்கு அவர் சத்தி யத்தின்மீது வைத்துள்ள பற்றே காரணம். அவர் எத்தகைய பலனை யும் உத்தேசித்துச் சத்திய நெறியி லிருந்து கொஞ்சங்கூட வழுவுவதை ஒப்புக்கொள்ள மாட்டார்.

நாம் செய்யவேண்டியவை

நாம் இன்று அவரைப் (காந்தியை) பின்பற்றி, தீண்டாமை என்ற பேயை ஒழித்தோமானல், பிறப்பைக் குற்றமாகக் கருதி ஒரு வகுப்பு மக்களை வெறுப்பதை மறந்தோமானல், நாம் தலைமுறை தலைமுறையாகச் செய்து வந்த அநீதியை ஒழிப்பதுடன், உலகத்துக்கே இத்துறையில் வழி காட்டியவர்கள் ஆவோம். ஆயினும் உலகத்தில் மாந்தரை மாந்தர் கொடுமை செய்யும் வழக்கத்தை அகற்ற நாம் முற்படுமுன், நாம் நாட்டிலேயே மலிந்துள்ள தீய வழக்கங்களை நீக்க வேண்டும்.

வெற்றி—ஒரு கனவு

தாங்கள் வென்ற நாடுகளில் உள்ள செல்வத்தைக் கவர்ந்து சென்ருலும், மக்களின் உள்ளங் களைக் கவர முடியாததால் அவர்கள் அந்நாடுகளை விட்டுச் செல்லும் பொழுது அவர்களது வெற்றி கன வாகவே முடிந்து விடுகிறது.

அறியாமையே

மேஞடுகள் எல்லா நாட்டாரை யும் ஒன்றுபடுத்தவும் உலகத்தில் அமைதியை நிறுவவும் பாடுபடு கின்றன. ஆயினும், பயன் என்ன? உள் உணர்ச்சி இல்லாவிடத்தில் வெளி முயற்சிகள் யாது செய்யும்? உள் உணர்ச்சி ஒன்றே உலகத்தைத்

தூய்மைப் படுத்தும். அதனை அறவே விட்ட மேனாடுகள், தாங் களே பன்முறை கூடி, அமைதியை நிலைநிறுத்த முயலுதல் அறியா மையே ஆகும்.

அழகு

அழகு என்பது ஒரு பொருள் அன்று அது வெளித் தோற்றமே ஆகும். அதற்கு இலக்கணங் கூறு தல் இயலாது. அதனைச் சித்திரித் தலும் இயலாது. அது விஞ்ஞானத் தையும் கடந்து நிற்பது ஒவ்வோர் உயிரின் ஆன்ம உணர்ச்சியையும் வளரச் செய்யும் பேரழகு எதற்கும் கட்டுப்பட்டதன்று.

ஒழிந்து வருகின்றது

மேற்றிசை நாடுகள் ஒரு காலத்தில் உண்மை நாகரிகத்தையும், ஆன்ம வளர்ச்சியையும் பெற்றிருந்தன. ஆயினும், அவை, சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக அவற்றை இழந்துவிட்டன. இந்த இழிவிற்குக் காரணம், அவற்றைப் பிடித்து அலைக்கும் அதிகார வெறியே ஆகும். பேராசை என்னும் பெருநோய் சிறிது காலமாக மேல் நாடுகளை பிடித்து அவற்றினை உருக்குலைத்து ஆட்டுகின்றது; ஆன்ம உணர்ச்சியையே அடியோடு ஒழித்து வருகின்றது.

முதற் கடன்

இந்தியா, தனது சரித்திர காலத் தொடக்கத்தி லிருந்தே இக்குறை யைப் பெற்றுள்ளது. இதன் மெய்த் தன்மையை உள்ளவாறு உணர்ந்து ஒழிக்க முயலாது, அரசியல் குறை பாடுகளைப் போக்க முயலல் பயன் படாது. எனவே, இந்திய பெரு மக்கள் இந்தியர் நன்மையை நாடிச் செய்யத்தகும் முதற் கடமை சமூக சீர்திருத்தமே ஆகும். இதில் வெற்றி பெறுதல், மனித இனத் திற்குப் பெருந் தொண்டு செய்த தற்கு ஒப்பாகும். இஃது இறை வற்கு இன்பமான தொண்டாகவும் இருக்கும்.

இன்றைய சமூகம்

முற்காலத்தில் ஒரு நாட்டி லிருந்து மற்றொரு நாட்டிற்குப் போக வர வசதிகள் மிகக் குறைவு. எனவே குறிப்பிட்ட ஒரு நாட்டினர் தமக்குள் ஒன்றுபட்டுக் கலந்து வாழ்ந்தனர். தமக்குரிய கலைகள், விஞ்ஞானம் முதலியவற்றை வளர்த்துத் தம்மை உயர்த்திக் கொண்டு வந்தனர். போக்கு வரவு சாதனங்கள் அமைந்துள்ள இக் காலத்தில் பல நாட்டு மக்களும் ஒன்றுகூடி வாழ வசதி இருக்கின் றது. பலவித நாகரிகங்களைக் காண வும் பின்பற்றவும் வசதிகள் இருக்

கின்றன. கலைகள் வேண்டும் அளவு விருத்தி அடைந்துள்ளன. ஆயினும் மனிதர்கள் நெருங்கிப் பழகப்பழக அவர்களிடையே ஆன்மநேய ஒருமைப்பாடு உண்டாதற்கு மட்டும் வழியில்லை. இதுதான் யாவற்றினும் இன்றியமையாதது. ஆயின் இஃது உண்டாதலே அரிதாய் இருக்கிறது. இக்கால உலக மக்களுக்குள், 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்னும் பரந்த மனப்பான்மை இல்லை. அஃது இன்மையாற்றான், இன்றைய சமூகம் மன அமைதி இன்றிக் கலக்கம் உற்றுள்ளது.

சாதிகளால்...

இந்து மதம் தான் உண்டாக்கின சாதிகளால் மக்களுள் வேற்றுமையை உண்டாக்கினதே அன்றி மன ஒற்றுமையை உண்டாக்கவில்லை. உயர்வு தாழ்வுகள் உள்ள இடத்தில் மன ஒற்றுமை எங்ஙனம் உண்டாகும்? மன ஒற்றுமையே சமூக முன்னேற்றத்தின் உயிர்நாடி என்பதை இந்து மதம் அறவே மறந்து விட்டது. சாதிகளால் ஒரே மாகாண மக்கள் - ஒரே மொழியைப் பேசும் மக்கள் - தங்களுள் ஒற்றுமை அற்றுப் பரிதவிக்கின்றார்கள்: மனக் காழ்ப்பு அதிகரித்துள்ளது. மன ஒற்றுமை இருக்க வேண்டிய இடத்தில் மன வேற்று

மையே தன்னரசு செலுத்துகிறது. இச்சாதிகளால் இந்துமத சமூக நிலைமையே உயிர் நாடியை இழந்து விட்டது.

அறிஞர் கடன்

இந்தியர் ஒற்றுமைப்பட வேண்டுமாயின், அம்முயற்சிக்கு வேண்டப்படுவது உள் உணர்ச்சி ஒன்றே ஆகும். புறக்கருவிகள் எவையும் வேண்டற்பாலன அல்ல. இன்று இந்தியர் ஒற்றுமையைக் குலைத்து நிற்பது மக்களது மன அமைதி இன்மையே ஆகும். அதற்கு உரிய காரணம் இன்னது என்பதை உய்த்துணர்ந்து நீக்குதலே அறிஞர் கடனாகும்.

பூசல்கள்

இந்தியா சாதிப் பூசல்களை நாள் தோறும் தரிசிக்கும் பேறு பெற்றுள்ளது. சாதிப் பூசல்கள் ஒரு புறம்! சமயப் பூசல்கள் மற்றொரு புறம்! இச்சாதி வேறுபாடுகளால் தொழில்கள் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கின்றன. ஒரு சமூகம் பரம்பரையாகக் குறிப்பிட்ட ஒரு தொழிலையே செய்தல் வேண்டும் என்னும் கோட்பாடு இந்தியத் தொழில்களையே அழித்து வருகின்றது. இதனுல் தொழிலின் மேன்மை அறியப்படாது தொழிலில் கீழ் நிலைக்குக் கொண்டுபோகப் படுகிறது. திறமை என்பது பரம்

பரைக் குரியது என்னும் நிலைமைக் குத் தாழ்ந்துவிட்டது. இஃது இந் நாட்டின் கெட்ட காலத்துக்குக் காரண மென்றே வருந்திக் கூற வேண்டுவதாய் இருக்கிறது.

மகான்கள்

மகான்கள் தாங்கள் வசிக்கும் காலத்துக்கு மாத்திரம் உரியவர்க ளல்லர். அவர்களுடைய பெருமை காலத்தைக் கடந்தது. சரித்திரத்தி லேயே அழிவற்ற இடம் பெறத் தக்க பெரியோர்களை நாம் தற் காலத்துக் குறுகிய நோக்குடன் பார்த்து அவர்களுடைய முழுப் பெருமையைக் குறைத்து விடுகி றோம்.

சமூகக் குறை

ஒன்றுபட்ட வலிமை யுடைய மக்களின் தொகுதியே 'சமூகம்' என்பது. 36 கோடி இந்தியரையும் அவர்தம் ஒன்றுபட்ட வலிமையை யுமே குறிப்பது ஆகும். இன்று இந்திய சமூகத்தின் நிலைமை யாது? இது சிதறுண்டு கிடக்கிறது. தன் பண்டைய ஒற்றுமையை இழந்து வாடுகின்றது. தன் பழைய வலிமை இழந்து தவிக்கின்றது. இச்சமூகத் திற்கு உற்றதொரு குறைதான் யாது? தலையாய குறை யாது? அது சமூக சம்பந்தமான குறையே அன்றி, அரசியல் தொடர்புள்ள

குறை அன்று! முதற் குறை - முத லிற் கவனிக்கத் தகுவது - சமூகக் குறையே ஆகும்.

முடியாது

மதப் போர்களிலும், ஜாதிச் சண்டைகளிலும், குருட்டு வழக் கங்களிலும் நாம் கிடந்து உழன்று கொண் டிருந்தால் யாரே நம்மை விடுவிக்க வல்லார்? இத்தகைய நிலையிலிருந்து வோட்டு பலத் தாலோ, இதர அரசியல் விவகாரங் களாலோ ஒரு நாடும் தன்னை விடு வித்துக்கொள்ள முடியாது.

மத அறிவு

விஞ்ஞான அறிவானது உலக மக்களை ஒன்றுபடுத்த முயல்கிறது. ஆனால் மத அறிவோ, மக்களைப் பாகுபடுத்தக் கற்பிக்கிறது; பிற மதத்தினரை வெறுத்துத் தள்ளு மாறு கற்பிக்கிறது.

பறவையின் சங்கிலி

கூட்டிலிருந்து பறவை தப்பித்துக் கொண்டது. ஆனால் அதன் காலில் விண்டுபோன சங்கிலித் துண்டு மட்டும் இருக்கிறது. அசையும் பொழுதெல்லாம் அது ஒலிக்கிறது.

சமூக சீர்திருத்தம்

உயரிய நிலைமைக்கு இந்தியா வரவேண்டுமாயின், சாதி வேறு பாடுகள் அறவே ஒழிதல் வேண் டும். உயர்வு தாழ்வுகள் நீங்குதல் வேண்டும். மனிதன் மனிதனுய் வாழ உரிமை இல்லாத இந்நிலையில் மண்ணுக்கு (நாட்டுக்கு) உரிமை தேடல் எங்ஙனம் பொருந்தும்? தனக்கே உரிமை இல்லாத இந்நிலை யில் உள்ள மனிதன் நாட்டுக்கு உரிமை தேடல் எங்ஙனம் இயலும்? அங்ஙனம் உரிமை தேடிப் பெறி னும், அது நிலைக்கக் கூடுமோ? எனவே, இந்தியாவுக்கு இப்போது மெய்யாகவே வேண்டப் படுவது

சமூகச் சீர்திருத்தமே தவிர, அரசியல் சீர்திருத்தம் அன்று. அரசியல் சீர்திருத்தம் இரண்டாவதாகவேண்டப்படுவது. உரிமை என்பது மெய்யாகவே ஆன்ம உணர்ச்சியி லின்றும் உதயமாவதே அன்றிக் கடைச் சரக்கு அன்று.

இறை உணர்ச்சி

எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவரை ஓரிடத்தில்தேடவேண்டியதில்லை. அம்முயற்சியே தவறு. நாம் இறைவரோடு நம்மை ஒன்று படுத்தல் வேண்டுமாயின், இயற்கைப் பேரழகில் நம் உள்ளம் ஊன்றுதல் வேண்டும். எங்கும் எழில்பெற விளங்கும் இறைவ

ரைக் குறிப்பிட்ட ஓர் இடத்தில் இருப்பதாக நினைத்தலும் தவறு. அஃது ஆண்டவரையே அவமதித்தலை ஒக்கும். இறைவரை எண்ணுதல் - வழிபடுதல் - என்பது அவரோடு நாம் ஒன்று படுவதற்கே அன்றி, அவரை நாம் வழிபடுத்தற்கு அன்று! நம் உலக இச்சைகளை அவரைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்வதற்கும் அன்று! நாம் உலக வாழ்வில் எதைச் செய்யினும் இறை உணர்வு நம் இதயத்தை விட்டு அகலாது இருத்தல் வேண்டும். அவ்விறை உணர்ச்சியே நம்மை இன்ப நிலையிற் சேர்க்கும்.

அடைதலும்—பெறுதலும்

அடைதல் - பெறுதல் என்னும் இரு சொற்கள் வெவ்வேறு பொருள் கொண்டவை. இறைவரைப் பெறுதல், நமது நோக்கமாக இருத்தல் கூடாது. அதனாற்றான் நூல்கள், 'எதற்கும் எட்டாதவர் இறைவர்' நம்மால் அடைதற்கு உரியவரே அல்லாமல் பெறுதற்கு உரியவர் அல்லர். அவர் நம்மிடை அகப்படும் அத்துணை எளியவர் அல்லர். அவரை மெய்யாகக் கண்டு அவரது அருட்பிழம்பில் - இயற்கைப் பேரழகில் நம்மை நாம்கலந்து விடச் செய்தல் வேண்டும்.

உரிமை

துப்பாக்கிகளோ, போர்க் கருவிகளோ மெய்யான உரிமையை ஒரு போதும் அளியா. மக்கள், தங்கள் நேர்மையான கடமைகளை உணரும் போதுதான்-அவற்றைச் செயலில் கையாளும் போதுதான் - உரிமை என்பதைப் பெற உரிமை பெற்றவர் ஆவர். அரசியல் உரிமை பெறுவது 'மனித உரிமை' பெறுவது ஆகாது. மனித உரிமை வேறு; மண் உரிமை வேறு. இவ்விரண்டும் இந்தியாவுக்கு வேண்டுவனவே. ஆயின், முதலில் வேண்டப்படுவது மண் உரிமை.

சாதிப் பிரிவு

சாதிப் பிரிவால் ஒரே நாட்டு மக்கள் தனித் தனிப் பிரிவினராய் ஒருவரோடு ஒருவர் தொடர்பின்றி வாழ்ந்து வருதலால், அவ்வப் பிரிவினர் பழக்க வழக்கங்கள் நாளடைவில் வேறுபட்டு விடுகின்றன. இவ் வேறுபாடு என்றும் நாட்டில் நிலை பெற்று விடுவதால் இப் பல பிரிவினர் மீண்டும் ஒன்று கூடுதல் பெரிதும் துன்பம் தரத்தக்கதாகிறது. ஒருவரை ஒருவர் வேறுபட்டவராகக் கருதுகின்றனர். எனவே, ஆன்ம ஒற்றுமை அழிந்து விடுகிறது. ஆன்ம ஒற்றுமை - உணர்ச்சி ஒற்றுமை - அழிந்த இடத்தில், 'சமூக

ஒற்றுமை' எதிர்பார்த்ததில் குதிரையின் தலையில் கொம்புகளை எதிர்பார்த்தல் போலாம்.

இறைவன் தோற்றம்

அறிவுடைய ஒருவன் கட்புலனுக்குக் காட்சி அளிப்பன அனைத்தும் கடவுள் தோற்றமே ஆகும். இயற்கையின் பேரெழிலை எண்ணி எண்ணி, கண்டு கண்டு, உள்ளம் அன்பு வழிப்படுங்கால், அவன் இயற்கையின் வாயிலாக இறைவனைக் காண்கிறான். அவ்வியற்கையோடு தானும் ஒன்றுபடும் எண்ணம் அவன் உள்ளத்தில் உதயமாகிறது.

சமூகம்

ஒரே சமூகம் ஒரே தன்மைய தாய் இருத்தல் வேண்டும். ஒரே ஆன்ம உணர்ச்சியினை உடையதாய் இருத்தல் வேண்டும். அந்நிலையிற் ருன் அச்சமூகம் பலம் பொருந்தி யது ஆகும். அச்சமூகம் அவ்வுயரிய நிலையில் மேலாகிய நோக்கங்களைக் கொண்டு முன்னணியில் வர இடை விடாது உழைக்கும்.

சிறைப் புகுவோம்

நம்முடைய பிரசங்கங்கள் நம் மைச் சிறை வாயிலுக்கு அனுப்பி ஞலும், நாம் மகிழ்ச்சியுடனே ஒரு வர் பின் ஒருவராகச் சிறைவாசம் புகுவோம். நாம் திரள் திரளாகச்

சிறை வாயிலை அணுகும்பொழுது நமது பழைய அவமானங்கள் மறைந்து, மூட வழக்கங்களாகிய கைவிலங்குகள் விலகிப் போகும்.

செவ்விய நிலைபெற

இந்திய சமூகம் செவ்விய நிலையைப் பெற வேண்டுமாயின், அச் சமூகம் சமரச சன்மார்க்க நெறியில் அனைவரோடும் யாதொரு வேறுபாடும் இன்றிக் கலந்து உறவாடல் வேண்டும். பிறநாட்டுச் சமூக நிலைகளை நன்கு அறிந்து அவற்றுக்கு ஏற்ப இந்திய சமூகம் தன்னையும் உயர்த்திக் கொள்ளுதல் வேண்டும். இவ் வேலை விரைந்து நடைபெறல் வேண்டும்.

இந்தியா

இந்தியா மிகப் பெரிய கண்டம். அதனுள் பலமாகாணங்கள் உண்டு. ஒவ்வொரு மாகாணமும் பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நிலப்பரப்புடையது; மக்கள் தொகை கொண்டது; பல மதத்தார்களைக் கொண்டது; பல மொழியினரைப் பெற்றது; பல வகைக் கொள்கையாளரைக் கொண்டது. இந்நிலைமை, இதற்குச் சரித்திரத் தொடக்கத்துக்கு முன்னிருந்தே இருந்து வருகிறது. இந்நிலைமை தவிர்க்க முடியாததாய் இருக்கிறது.